www.tamilarangam.net


# புதியகண்ணோட்டம்

வெளியீடு — 6 1988 ஆடி 15 ரு: 2/-

The NEW PERSPECTIVE


## போரைத்தவிர்த்து - புனர்வாழ்வளிக்க, நாட்டைப் புனரமைக்க

# மக்களே! போராளிகளே!!

# ஒத்துழையுங்கள்.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள்

ஆடி 29. அமைதிக்கான நம்பிக்கையை மக்கள் மனதில் ஊட்டிய ஒப்பந்தத்தின் ஒருவருட பூர்த்தி நாள். ஆனால் அமைதி......?

83 ஆடியிலிருந்து 87 ஆடிவரை தொடர்ச்சியாக அரச அடக்குமுறை யுத்தத்தில் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து விட்ட தமிழ்மக்களை இளைப்பாற அனுமதிக்காத புலிகளின் போர்ப் பிரகடனங்கள் தொடர்ந்தும் மக்கள் தலையில் தொல்லைகளைச் சுமத்துவதாகவே இருக்கிறது.

சிந்துபாத்தின் தோளை விட்டிறங்காக் கிழவன் போல துவக்குகளைக் கைவிடாப் புலிகளின் நிரந்தரப் போர்க்கோலத்திற்கான உண்மைக் காரணங்கள் குறித்து மக்கள் அனைவரும் தெளிவாகச் சிந்தித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் அமைதிச் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதே பாதிக்கப்பட்ட நம் மக்களின் புனர்வாழ்வுக்கும், அழிக்கப்பட்ட எம் தேசத்தின் புனரமைப்பு வேலைகளுக்குமான உடனடித் தேவையாக அமைந்திருக்கிறது. அதற்கான முழு ஒத்துழைப்பையும் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிர்பார்க்கிறது.

நீண்டகால யுத்த நெருக்கடிகளுக்கு தயாராகும்படி பயமுறுத்தும் புலிகளிடமிருந்து மக்களையும், நாட்டையும் காப்பாற்ற —

கிடைக்கக் கூடிய அனைத்து உதவிகளையும் பயன்படுத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளால் நம் தேசத்தைக் கட்டியெழுப்ப —

ஒத்துழைப்பு வழங்க வரும்படி அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

## எங்கே போகின்றோம்?

**எங்கே போகின்றோம்? எங்கே போகின்றோம்?**

ஈழமக்கள் மொழியுரிமை - குடியுரிமை இழந்து இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப் பட்டதுடன் -

அடிக்கடி ஏற்பட்ட இனக்கலவரங்களில் சிங்களக் குண்டர்களால் உயிர், உடமை, மானம் ஆகியவற்றை சிறீலங்காப் பிரதேசங்களில் இழந்தது மட்டுமல்லாது,

தமது சொந்த மண்ணிலும் அரச கூலிப் படைகளின் அட்டகாசத்தினால் அகதிகளாக்கப் பட்டார்கள்.

1983 ஆடியில் நடந்த இவ் இனவெறியின் உச்சக்கட்டப் பழிவாங்கலைத் தொடர்ந்து, பாதுகாப்பற்றவர்களாய்த் திகைத்து நின்ற தமிழ்மக்களிடமிருந்து போராட்டம் முகிழ்த்தது.

குறுகிய சுயநல நோக்கு,
குடும்பச் சார்பு நோக்கு,
சொத்தாசை,
அதிகார ஆசை,
சாதிரீதியான வேறுபாடு காட்டல்...

போன்ற கேடுகெட்ட இயல்புகளைப் பரம்பரையாகப் பெற்ற எமது தமிழ் மண்ணிலும் —

இளைஞர்கள் இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, மக்களின் துயர் துடைக்கவென பொதுநல நோக்கோடு குடும்பங்கள், உறவுகள், வேலைகள், பொறுப்புக்கள் அனைத்தையும் உதறி விட்டு,

எமது மக்கள், எமது நாடு என்ற ரீதியில் தமது உயிரையே தியாகம் செய்யத் தயாராக —

பொது எதிரியான சிறீலங்கா இனவாத அரசுக்கெதிராக ஆயுதமேந்திப் போராட ஆயத்தமானார்கள்.

மக்களும், தமது துயர் துடைக்கவென எழுந்தவர்களைத் தெய்வங்களென போற்றும் நிலைமை ஆரம்ப காலத்தில் நிலவியது.

எமது அரைப் பிரபுத்துவ — முதலாளித்துவ சமுதாயத்தில் பெண்ணடக்குமுறைத் தளைக்குட்பட்டு —

சீதனப் பிரச்சினை,
பொருளாதார சமத்துவமின்மை,
சமுதாயக் கட்டுப்பாடுகள் ...

போன்ற பல சீர்கேடுகளில் சிக்குண்டிருந்த இளம் பெண்களும் கூட தமது அச்சம் மட நாண மாயைகளை உதறி விட்டு,

இரவு நேரங்களில் காடுகளிலும் மேடுகளிலும் கண்துஞ்சாது காவல் காத்து நின்ற காட்சிகளையும் நாம் காணக் கூடியதாயிருந்தது.

இவ்வாரம்ப காலத்தில் எதிரியின் அடக்குமுறை உக்கிரத்தின் காரணமாக எல்லா இயக்கங்களுமே மக்களுக்காக உழைப்பது என்பதில் தீவிரமாயிருந்தன

பொது நோக்கத்திற்கான தமது உயிர்த் தியாகங்களினாலும் அர்ப்பணிப்புகளினாலும் 'போராளிகள்' என்றால் 'சமூகத்தின் மதிப்பிற்குரியவர்கள்' என மதிக்கப்பட்டு வந்த நிலை —

1985 சித்திரை 29 ல் புலிகள் இயக்கம் ரெலோ தலைவர் சிறீசபாரத்தினத்தையும் பலநூற்றுக்கணக்கான ரெலோ தோழர்களையும் படுகொலை செய்ததுடன், ஒரு கறைபடிந்த வரலாறாக மாறிற்று.

இதுவே போராட்டத்தின் மீதும், போராளிகள் மீதும் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்குச் சாவுமணி அடிக்கப்பட்ட நாளாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை தொடர்வது —
இனியும் தொடரப் போவதுதான் என்ன?

( - தொடர்ச்சி 7ம் பக்கம்......)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இனிய தமிழ் மக்களே!....

**மக்களே நீங்கள் விழிப்பாயிருங்கள்!**

**உங்கள் பேரால் உங்களைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயங்களில் தெளிவாயிருங்கள்!**

**ஆத்திரமும் அவசரமும் வாழ்வைத் தராது.**

**அலட்சியமும் அஜாக்கிரதையும் உள்ளதையும் மற்றவர்கள் கொண்டுபோக வழி வகுக்கும்.**

**எமது அன்புக்குரிய தமிழ் மக்களே!**

புலிகளுக்கும் — இந்தியப் படையினருக்கும் இடையிலே நடைபெற்று வரும் கள்ளன் — பொலிஸ் விளையாட்டு இன்னும் முடிவுற்றதாக இல்லை.

முடிவுறுவதுபோல் விளக்கங்கள் வெளிவருகின்றன. ஆனால், அதற்கான ஆரம்பங்களைக்கூட காணமுடியவில்லை.

ஆனி மாதம் 15ந் திகதி என்றார்கள்

பத்திரிகைகளெல்லாம் ஒரே பரபரப்பு!

பிறகு, ஓரிரு நாட்களில் மௌனம்.

மீண்டும் ஆடி 1ந் திகதி —

மீண்டும் அதே பரபரப்பு!

புலிகளுக்கும், இந்திய உளவுப் படைப்பிரிவான 'றோ' (RAW) வின் அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் முன்னேறிக் கொண்டிருப்பதாக குரங்காட்டி கிட்டுவின் பத்திரிகைப் பேட்டிகள் தெரிவிக்கின்றன.

இடையில் ஒரு கேள்வி —

இந்த 'றோ' அதிகாரிகளைப் பற்றித்தானே முன்னர் புலிகள் பல கதைகள் கூறினார்கள்!

அவர்கள் இயக்கங்களின் ஒற்றுமையைக் குலைத்ததாகவும்,

இயக்கங்களுக்கிடையில் மோதலை உருவாக்கியதாகவும் கூறினார்கள்.

இப்போது என்ன நடந்தது ?

அதெப்படி, அந்த 'றோ' அதிகாரிகள் புனிதமானவர்கள் ஆகினார்கள் ......... ?

புலிகளுடன் பேசுவதற்காக அந்த அதிகாரிகள் கங்கையில் நீராடினார்களோ ...... !

அல்லது —

பிரபாகரன் பிரபுவின் ஆசியைக் கிட்டு மாமா அந்த அதிகாரிகளுக்கு வழங்கி பாவ விமோசனமளித்து தமிழ் மக்களின் நண்பர்கள் ஆக்கிவிட்டாரோ ........ !

ஆக இந்த உலகத்தில் பாவமும் புண்ணியமும், சரியும் பிழையும், தியாகமும் துரோகமும் புலிகளைச் சார்ந்துதான் செயற்படுகின்றனவோ

இந்தப் பிரபாகரோபதேசத்தை நாங்கள் 'அறியாதவர்க'ளாக இருந்ததற்காக நெற்றியில் குட்டி இரு கன்னங்களிலும் தப்பு தப்பு என மூன்று முறை சாத்திக் கொள்வோமாக !

அது ஒருபுறமிருக்க,

இப்போது இந்தியாவின் பிரச்சினை எப்படியாவது ஒரு தேர்தலை மிக விரைவாக நடத்தி முடித்து விட வேண்டுமென்பது.

தமிழ் நாட்டுத் தேர்தல் என்னும் கண்ணாடிக்குள்ளால்தான் இந்தியா இங்குள்ள விடயங்களைப் பார்க்கிறது.

இதன் காரணமாகப் புலிகளுக்கு எவ்வளவு பணத்தையென்றாலும் கொடுக்கத் தயாராக விலை பேசுகிறது.

புலிகளுக்கும் இந்த வியாபாரம் புதிதல்ல. பல தடவைகள் செய்த வியாபாரம்தானே !

பேரம் சுமுகமாகப் போகின்றது.

ஆனால் —

எதிர்பார்க்கப்படும் முடிவுகளும் விளைவுகளும் ஏற்படுமா என்பது தான் இரு பகுதியினருக்கும் இன்னும் உறுதியாகாமல் இருக்கிறது.

## கருத்துப்பகிர்வு

ஆசையினால், அனுபவம் மிக்கவர்கள் தமது பகிரங்க விலையை 50 கோடியளவில் உயர்த்தியிருக்கிறார்கள்.

— அதே வேளை, கள்ள நோட்டாக 10 கோடியைக் கோரியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் தலைவிதி!

— இப்படியான நிலைக்குள் அகப்பட்டு நிற்க வேண்டி இருக்கிறது அதுவும் விடுதலைப் போராட்டத்தின் பேரில் !

தமிழ் மக்களின் அரசியல் வரலாறு இந்த மாதிரியான நிலைக்கு உள்ளானதாகக், எம்மை நாம் நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஏனென்றால் —

தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் தான் அது தொடர்பான விழிப்போ, தெளிவோ ஏற்பட்டதாக இல்லை.

ஆனால், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இன்னும் உறுதியாக நம்புகிறது:

தமிழ்மக்கள் முட்டாள்களல்ல.

தம்மை வியாபாரப் பொருளாக மாற்றிய துரோகிகளுக்கு உரிய நேரத்தில் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் என்று.

**அறிவார்ந்த தமிழ் மக்களே!**

துரோகத்தனங்களின் வரலாறு தொடரும் நிலையைத் தடுத்து நிறுத்தும் நாளை நோக்கி நாம் அனைவரும் நடைபோட வேண்டும்.

விடுதலை என்னும் பெயரில் மக்களை வியாபாரப் பொருளாக்கும் நிலைமைக்கு முடிவுகட்டும் நிலையை நோக்கி நாம் அனைவரும் தெளிவோடு செயற்படும் நிலையேற்பட வேண்டும்.

தமிழ்மக்கள் இன்று இருதலைக் கொள்ளி நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு உலகத்தின் கண்முன்னால் இந்தியாவுக்கு எதிரானவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியப் படைகள், தமிழ்மக்களை அடக்கி ஆளும் ஆதிக்கப்படைகள் போலக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஆனால் —

அதேவேளை, இந்தியப்படைகள் இலங்கையை விட்டு முற்றாக வெளியேறுவதை தமிழ் மக்கள் விரும்புகிறார்களா என்றால் ...... இல்லை.

திருகோணமலையில் உள்ள தமிழ் மக்கள் கூறுகின்றார்கள்: இந்தியப் படைகள் தங்களின் பாதுகாவலர்கள் இந்தியப்படைகள் வெளியேறினால் தமக்கெதுவித பாதுகாப்பும் இல்லை எனவே தாமும் இந்தியப்படைகளோடு சேர்ந்து வெளியேறப்போவதாக திருமலை மக்கள் வெளிநாட்டு நிருபர்களுக்கு கூறுகின்றார்கள்.

மட்டக்களப்புப் பிராந்தியத்திலும் இதுதான் பெருமளவு நிலை.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் அவ்வாறு இன்னும் சொல்லத்தொடங்கவில்லை.

அப்படியானால்,

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்தவுடன் சிறீலங்கா அரசாங்கமும் சிங்கள பேரினவாதிகளும் இந்தியப்படைகளை வெளியேறும்படி கோரப் போகின்றார்கள்.

தமிழ் மக்களின் நிலை என்ன ?

**பத்திரிகை அறிக்கை :**

**றோசல்ல தோட்டத்து கொலை கொள்ளைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.**

**கடந்த 08.07.88 (வெள்ளிக் கிழமை) அன்று நடந்த றோசல்ல விக்டன் தோட்டத்துரை நாத் பெரேரா- றோசல்ல குறுக்குவாடி தோட்டத்துரை குதம் திசநாயகா, (சின்னத்துரை) ரஞ்சன் டி சில்வா ஆகியோரின் கொலையுடன் கூடிய கொள்ளைச் சம்பவத்திற்கு EPRLF வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.**

**இவ்வாறான சம்பவங்கள் மலையகத்து சூழ்நிலைகளையும் — பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளாத விஷமிகளால் மேற்கொள்ளப் படுகிறது. இதன் விளைவாக மலையக மக்கள் — குறிப்பாக இளைஞர்கள் தேவையற்ற கெடுபிடிகளுக்கு உட்படுத்தப் படுவதுடன் மலையகத்தில் அமைதியின்மை தோன்றவே வழிவகுக்கின்றது. இது யாரால் மேற்கொள்ளப் படுகின்றதெனக் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்படாத பட்சத்தில் மலையகத்தில் முற்போக்கான வேலைகளை மேற்கொள்ளும் சக்திகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துவதாகவே இது அமையும். மலையகத்தில் எமது அரசியல் செயற்பாடுகளின் வளர்ச்சியை விரும்பாத சக்திகள் இரகசியமான வதந்திகள் மூலம் பழியை எம்மீது சுமத்தி நயவஞ்சகமாக எம்மை வீழ்த்த நினைக்கும் சதிகார நோக்கங்களுக்கும் இது வாய்ப்பாக அமைந்து விடுகிறது.**

**எனவே, இச்சம்பவத்திற்கும் எமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்வதுடன்- இதுபோன்ற கொலை - கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேவேளை, இதன் சூத்திரதாரிகளைக் கண்டு பிடித்து அம்பலப்படுத்த உதவும்படியும், அதுமட்டுமல்லாது பொய் வதந்திகளைப் பரப்பும் வஞ்சக நோக்கம் கொண்ட சக்திகளை இனங்கண்டு கொள்ளும்படியும் மலையக மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

10.07.88

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதிய கண்ணோட்டம்

'ஆமாம், இந்தியப் படைகள் வெளியேறத்தான் வேண்டும் என்று கூறப்போகின்றார்களா ?

' இல்லையில்லை, வெளியேற வேண்டாம் ' என்று போகும் இந்தியப் படைகளை மறித்து வழி மறிப்புப்போராட்டம் நடத்தப் போகின்றார்களா ?

அல்லது —

சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தலையைக் கவிழ்ந்து பிடித்துக் கொண்டு மௌனமாக இருக்கப் போகின்றார்களா ?

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

இப்பொழுதே முடிவு செய்து கொள்ளுங்கள் .

சிறீலங்கா அரசாங்கம் தனது நோக்கங்களை அடைவதற்குக் கணக்காக புலிகளை வழிப்படுத்திச் செயற்படுத்தியிருக்கின்றது .

புலிகளும் தமிழ் மக்களை நெருக்சடிக்கு உள்ளாக்கும் தமது வரலாற்றுச் சேவையை ஆற்றி ,

நல்ல முறையில் சிங்கள பேரினவாதிகளுக்கு மிகச் சிறப்பாகவே துணை செய்திருக்கிறார்கள் .

அல்லது —

50 கோடி வாங்கியவுடன் புலிகளுக்கு இந்தியா நண்பன் !

எனவே , உடனே மாலை மரியாதைசன் தோரண கும்பங்களுடன் மீண்டும் இந்தியப் படைகளுக்கு விருந்து பசாரமா ?

நல்ல வெட்கம் கெட்ட சீவியமடா நமது நிலைமை .

புலிகளை நம்பி ஆதரவளிப்பதற்காக இந்தியாவிலிருந்து புறப்பட்ட 'இன்குலாப்' போன்றவர்கள் ஏற்கனவே தலைக்குத் துண்டைப் போட்டுக் கொண்டு ஓடி ஒளிந்து விட்டார்கள் .

தி . மு . க தலைவர், இப்போது தமது மேடைப் பேச்சுக்களின் திசையை மாற்றிக் கொண்டு விட்டார்.

நமது நாட்டில் புலிகளுக்குக் கொடி பிடித்த 'தேச பக்தர்கள்,

முன்னர் ' புலிகள் மாபெரும் வீரர்கள் ' என்று உரத்துக் குழலூதியவர்கள் ........

இப்பொழுது —

'அவன்கள் பாவம்தானே!' என்று அமத்தி வாசிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் .

எனவே , அவர்களும் மௌனத்தைநோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள் .

முன்னர் புலிகளின் வீரத்தைக் கொட்டை எழுத்தில் போட்ட புலிகளின் ஆதரவுப் பத்திரிகைகள் —

இப்போது புலிகளுக்கும் 'றோ'வுக்குமிடையில் ஒப்பந்தம் என மக்களுக்குச் சொல்வதில் அக்கறை காட்டுகின்றன .

மக்கள் செத்துக் கொண்டிருந்த போது வீரத்தைக் கூறி அதை மறைக்க முற்பட்டவர்கள் —

இப்போது அது எடுபடாது என்பதனால் ,

இந்தியா புலிகளுக்குத் துணை நிற்கும் — மீண்டும் புலிகளே அதிகாரிகள் என்று கூறுவதன் மூலம் புலிகளுக்கு ஆதரவு திரட்டும் தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகின்றனர் .

தமிழ் மக்களின் பெயரில் இங்கு நடத்தப்படுபவை அத்தனையும் வியாபாரங்கள் .

வீரம் - தியாகம் என்பதெல்லாம் ஏமாற்று வாக்கியங்களாக்கப்பட்டிருக்கின்றன .

உயிர்கள் இங்கு பேரம் பேசும் பொருட்கள் ஆக்கப்பட்டிருக்கின்றது .

ஒப்பந்தங்கள் எல்லாம் வர்த்தக ஒப்பந்தங்களாக மட்டுமே உள்ளன .

எனவே - ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் சொல்கிறோம் :

இங்கு இப்போது போராட்டம் என்ற ஒன்று நடைபெறவில்லை .

ஆகவே எமது மக்கள் அர்த்தமின்றிச் சாவதை ஏற்க நாம் தயாரில்லை ;

அமைதி ஏற்படாமல் தமிழ்மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் இல்லை .

குறைந்த பட்ச ஜனநாயகம் ஏற்பட்டு தமிழ்மக்களின் அபிப்பிராயம் சுதந்திரமாக வெளிப்படாமல் இருக்கும்வரை —

ஜனநாயகத்திற்கான போராட்டம் ஒன்று தமிழ்மக்களுக்கு உள்ளேதான் நடக்கும் .

இங்கு ஆயுதங்கள் முற்றாகப் பறிக்கப்படாமல் ஓர் ஆரோக்கியமான சூழல் ஏற்படாது .

எவ்வளவுக்கெவ்வளவு இப்போது நிலவும் அராஜகமும் ஆயுத வெறியும் தொடர்கிறதோ —

அவ்வளவுக்கவ்வளவு சரியானதொரு போராட்டம் எழுச்சி பெறுவதற்கான காலமும் பின்தள்ளும் .

இன்றைக்கு ஆயுதந் தூக்கித் திரியும் புலிகளையோ கொள்ளையடித்துத் திரியும் சதிகாரக் கும்பல்களையோ —

தமிழ்மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் இயக்கங்கள் என்று யாராவது நம்பினால் ,

அவர்களுக்காக நாங்கள் பரிதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது .

### இனிய தமிழ் மக்களே!

இந்தக் கூட்டங்கள் தமிழ்மக்களை விற்றது — அழித்தது போதும் என முடிவு கட்டுவோம் .

கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் தமிழ்மக்களின் தலைவர்கள் என்று சொல்லப்படும் நிலைமைக்கு சமாதி கட்டுவது என உறுதியாக முடிவு செய்வோம் .


விடுதலையின் பேரில் நடக்கும் சமூக அட்டூழியங்களை அடக்குவதற்கு வழி காண்போம் .

புதிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கான அத்திவாரத்தைப் போடுவதற்கு ,

தேவையான நிலத்தை இப்போது பண்படுத்துவோம் .

எதிர்காலத்தில் ஓர் சரியான போராட்டம் உருவாகுவது என்பது இப்போது நாம் ஏற்படுத்தும் அமைதியிலும் ஜனநாயகத்திலுமே தங்கியுள்ளது .

இந்த சூத்திரத்தின் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு செயற்படுவோம் .



## ஈசாப் குட்டிக் கதைகள் - 4

### சேவலும் நரியும்

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் இரம்மியமாய் இருந்தபடியால் உற்சாகமாய் சேவல் கூவியது: பல தடவை கூவியது. இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரி பசியாய் இருந்தது. ஆனால் சேவல் மரத்தின்மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்து, ''சகோதரனே, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப் பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும், சகோதரப் பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றிப் பேசுவோம்'' என்றது.

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது; அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல தலையைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி, ''ரொம்ப அக்கறையாக எதையோ பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது?'' என்று கேட்டது.

சேவல்: ''அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைக் கவனிக்கிறேன்.''

நரி: ''அப்படியானால் நான் போய் வருகிறேன்.''

சேவல்: ''போகாதே, நண்பா. நான் இதோ கீழே வருகிறேன். நாயைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுதுதான் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாயே!''

நரி: ''அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகர் இன்னும் கேள்விப் பட்டிருக்க மாட்டார்களே! அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால் நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்!"

நரி ஓட்டம் பிடித்தது. சேவல் சிரித்தது.

## உளறுவாயன் ரசித்த துணுக்கு —

ஈழவிடுதலைப் போராட்டம் மும்முரமாய் நடந்து கொண்டிருந்த நேரம்....
சன நெரிசலோடு போய்க்கொண்டிருந்த பஸ்ஸில் நின்றபடி பயணம் செய்து கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். அருகே நின்று கொண்டிருந்த பொடிப்பிள்ளை ஒருவரின் சப்பாத்துக்கால் அந்தப் பெரியவரின் காலை மிதித்துக்கொண்டிருந்தது.
பெரியவர் முதலில் பொடிப்பிள்ளையைப் பார்த்துச் சிநேகபூர்வமாய்ச் சிரித்தார். பதிலுக்குச் சிரித்தது வாலிபம் !
" தம்பி! என்ன வேலைக்கே போறியள் ?"
" இல்லையப்பு நான் படிச்சுக் கொண்டிருக்கிறன்"
" உண்மையாய்த்தான் சொல்லுறியளோ தம்பி..?"
" ஓமப்பு, இந்த முறை A/L எடுக்கிறன் ."
" ஏதும் இயக்கங்களோடை தொடர்பாய் இருக்கிறியளோ தம்பி ?"
" சீச்சீ! அப்பிடியொண்டுமில்லை அப்பு !"
" வீட்டிலை அண்ணன் - தம்பி ஆரேனும் இயக்கங்களில இருக்கினமோ ?" - " இல்லை."
" குறை விளங்காதையும் தம்பி! இயக்கப் பொடியளோடை சிநேகிதம் இருக்கே உமக்கு ?"
" சீச்சீ! ஏனப்பு கேக்கிறியள் ?"
" தம்பிக்கு நல்லாத் தெரிஞ்சவை எண்டு ஆரும் இயக்கங்களில இருக்கினமோ...?"
" அப்பிடி ஒருத்தரும் இல்லை அப்பு "
" அப்ப எட்டா காலை...."



www.tamilarangam.net



# ஆற்றல்மிகு தோழர்களே!

**அன்பார்ந்த தோழர்களே !**

நாம் எந்தவொரு விடயத்தையும் சாதிப்பதற்கு மக்களின் அபிப்பிராயங்கள், பங்களிப்புக்கள் மிகவும் அடிப்படையான பாத்திரத்தை வகிக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே நமது எதிர்கால இலக்குகளை வென்றெடுப்பதற்கு நாம் மக்களின் நல்லபிப்பிராயங்களை வென்றெடுப்பது அவசியமாகும்.

நாம் மக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் வென்றெடுக்க முடியுமாஎன்றால் அது சாத்தியமாகாது என்பது உண்மையேயாயினும், மக்களின் பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயங்களை நாம் வென்றெடுப்பது சாத்தியமாகும்.

அதுவே தேவையுமாகும்.

உழைக்கும் மக்களை என்றென்றைக்கும் அடக்கி ஆளவேண்டும், சுரண்டிக் குவித்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்றிருக்கும் கூட்டத்தினரை, பிரிவினரை நாம் வென்றெடுக்க முடியாது என்பது உண்மைதான்.

அந்தக் கூட்டத்தினர் தமது பண வலிமையாலும், அதிகார வலிமையாலும் மக்கள் மத்தியில் செல்வாக்குகளை ஏற்படுத்திக்கொண்டு எம்மை மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படுத்துவதற்கான முயற்சியில் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

நுனிப்புல் மேயும் புத்திசாலிகளும்,

ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வதின் மூலம் தமது சொந்த அபிலாசைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றிருக்கும் ஒரு பகுதி புத்தி ஜீவிகளையும் நாம் திருத்த முடியாது.

ஏனெனில் —

அவர்கள் நித்திரை செய்வதுபோல் பாசாங்கு செய்பவர்கள். ஆனால், இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

ஏனெனில், இவர்களே மக்களைக் குழப்பி விடும்,

எமது ஸ்தாபனத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மிகவும் தந்திரமாகக் கிளப்பி விடும் பகுதியினர் ஆவர்.

இவர்கள் நடுநிலையாளர்கள், பக்கம் சாராதவர்கள் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டே இவ்வேலையைச் செய்கின்றனர்.

சாதாரண மக்கள் இவர்களால் ஏமாற்றப்படுவதே அதிகம்.

ஆகையினால் இந்த போலித்தனமான புத்திஜீவிகளுக்கு எதிராக நாம் விடாப்பிடியான கருத்துப்போராட்டத்தை நடத்தியாக வேண்டியுள்ளது.

இதேபோல் மற்றொரு விடயம் என்னவெனில்,

மக்கள் சுதந்திரமாகத் தமது சொந்த அபிப்பிராயங்களை அச்சமின்றிக் கூறும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

அப்பொழுது மக்களின் பெரும்பான்மையானவர்களின் உண்மையான அபிப்பிராயம் வெளிப்படும் நிலையை நாம் காண முடியும்.

மக்கள் இன்று —

கொலை வெறியர்க்கும்,

கொள்ளை வெறியர்களுக்கும்,

அதிகார வெறியர்களுக்கும் அஞ்சி பேசா மடந்தைகளாய் தமது உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்

இந்த நிலையிலிருந்து மக்களை விடுவித்து மக்கள் மத்தியில் ஒரு கருத்துச் சுதந்திரத்தை உருவாக்குவதே நமது இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

அதை நாம் உருவாக்கவில்லையென்றால் எமது சமுதாயம் முற்போக்கான பாதையில் முன்னோக்கி நகர்வதற்கான எந்தவொரு காலடியையும் எடுத்து வைக்க முடியாது.

மக்கள் தம் நெஞ்சுக்குள் அடக்கி வைத்திருக்கும் கருத்துக்கள் வெடித்து வெளி வரும் நிலையை நாம் உருவாக்க வேண்டும்..

## தோழர்களே !

இன்றைக்கு எமது மக்களுக்குத் தேவையான இந்தக் கடமையை நாம் ஆற்றுகின்றபோது நாம் மிகவும் நிதானமாகச் செயலாற்ற வேண்டும்.

எம்மைக் கண்டு பொது மக்கள் அஞ்சுகின்ற நிலையை உருவாக்கி விடக் கூடாது.

நாங்களும் மற்றொரு மிருகக் கூட்டம்தான் என மக்கள் அபிப்பிராயப்படும் நிலையை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதில் நாம் எச்சரிக்கையோடும் அக்கறையோடும் செயற்படுதல் வேண்டும்.

மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் அக்கறை என்பது இலக்குத் தவறிப் போய்விடக் கூடாது என்பதில் நாம் எந்தவொரு கண நேரமும் விழிப்போடு செயற்பட வேண்டும்.

ஏனென்றால் —

எமது எதிரிகள் எமக்கு எதிராகச் சேற்றை வாரியிறைத்துப் பிரச்சாரம் செய்வதில் மிகவும் அக்கறையோடு ஒவ்வொரு விடயத்தையும் எதிர்பார்த்து இருக்கிறார்கள்

நாம் எப்போது தவறு விடுவோம் என்று காத்திருக்கிறார்கள்.

'' இவர்களும் புலிகளைப்போன்றவர்களைச் சேர்ந்தவர்கள்தானே! '' என்று சொல்லிக்கொண்டு,

தமது கொலைத்தனத்தை மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவதற்கு இந்தக் கழுகுகள் காத்திருக்கின்றன. என்பதை நாம் எந்தச்சந்தர்ப்பத்திலும் மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் மட்டும்தான் கருத்துச் சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஏனைய மக்கள் அனைவரும் பேச முடியா நிலையில் கொலை வெறியர்களால் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையை மாற்றுவதற்காக நாம் போராடுகின்றோம் என்பதன் அர்த்தம் நாமும் எமது ஆதரவாளர்களும் மட்டுமே கருத்துச்சுதந்திரம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல.

அப்படி நாம் நினைத்தால் — கருதினால் நாம் தவறானவர்கள் ஆவோம்.

நாம் போராடுவது மக்கள் அனைவரும் சுதந்திரமாக தத்தம் அபிப்பிராயத்தை — எந்த அபிப்பிராயமாக இருந்தாலும் சரி — அவற்றை பேசும் எழுதும் உரிமை வேண்டும் என்பதற்காகவேதான் என்பதை மறந்து விடக் கூடாது.

இவ் விடயத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமை மிகவும் கறாராகவே இருக்கும்.

இதில் எந்த தோழர் தவறு விட்டாலும் மன்னிக்கப்பட மாட்டார்கள்

## உறுதிமிக்க தோழர்களே!

எத்தனையோ இழிச் சொற்கள், பழிச் சொற்கள் பொய்ப் பிரச்சாரங்கள் ஆகியவற்றை இதயத்தில் தாங்கிக் கொண்டு ஸ்தாபனத்தின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் நீங்கள் —

மக்களோடு பண்பாகப் பழகுங்கள்,

மக்களோடு அன்பாகப் பழகுங்கள்,

துன்பப்படும் மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவி செய்யுங்கள்.

மக்கள் வதந்திகளையும் பொய்ப் பிரச்சாரங்களையும் நம்பி எமது ஸ்தாபனத்தைப்பற்றி அவதூறாகக் கதைக்கிறார்கள் என்பதற்காகப் பொறுமையை இழந்து விடாதீர்கள்.

அவ்வாறான மக்களுக்கு பொறுமையோடும் நிதானத்தோடும் விளக்கமளியுங்கள்.

போற்றுவோர் போற்றட்டும் புழுதி வாரியிறைத்துத் தூற்றுவோர் தூற்றினாலும் உங்கள் கருத்துக்களை உறுதியோடும் துணிவோடும் மக்கள் மத்தியில் முன் வையுங்கள்.

மக்கள் உடனடியாக உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொறுமையிழந்தோ, விரக்தியடைந்தோ விடாதீர்கள்.

உங்கள் கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறுங்கள்.

மக்கள் ஒரு நாள் உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

அயோக்கியர்களையும் பொய்யர்களையும் அடையாளம் கண்டு கொள்ளத்தான் போகிறார்கள் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து மக்கள் மத்தியில் செயற்படுங்கள்.

எமது ஸ்தாபனத்தின் செயற்பாடுகள் மீதோ,

எமது ஸ்தாபன உறுப்பினர்கள் மீதோ மக்கள் முன் வைக்கும் விமர்சனங்களைக் கவனமாகச் செவிமடுத்துக் கேளுங்கள்.

மக்களின் அபிப்பிராயங்களைப் புறக்கணிக்காதீர்கள்.

மக்கள் முன்வைக்கும் விமர்சனங்கள் தொடர்பாக பரிகாரம் காணப்படும் என்பதை உறுதியாக முன் வையுங்கள்.

அவற்றை நடைமுறையாக்குங்கள்.

இதே வேளை —

மக்கள் முன்வைக்கும் விமர்சனங்களில் தவறுகள் இருக்காது என்பதில்லை.

மக்களின் விமர்சனங்களில் தவறுகளை நீங்கள் காண்கின்றபோது அத்தவறுகளைச் சுட்டிக்காட்டி மக்களின் விமர்சனங்களை நெறிப்படுத்துவதும் உங்கள் கடமையே.

வதந்திகளையும் பொய்ப் பிரச்சாரங்களையும் நம்பி மக்கள் தவறு விடுகின்றனர் என்று ஆத்திரம் கொள்வதற்கு எமக்கு உரிமையில்லை என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்

மாறாக, மக்கள் மத்தியில் சரியான கருத்துக்களைக் கொண்டுபோவதற்கு எமக்கு உரிமையுண்டு என்பதேயாகும்

மக்கள் எம்மீதுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுகையில் அதில் உண்மை இருந்தால் அதனைத் துணிவோடு ஒத்துக்கொள்ளுங்கள்.

அதனைத் திருத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை ஸ்தாபனம் எடுக்கின்றது — எடுக்கும் என்பதை மக்களுக்கு விளக்குங்கள்.

ஈழப் போராட்ட கால கட்டத்தில் ஏற்பட்ட சரிகளையும் தவறுகளையும்,

வெற்றிகளையும் தோல்விகளையும்,

தியாகத்தனங்களையும் துரோகத்தனங்களையும் மக்களுக்குத் தெளிவாகவும் முறையாகவும் விளக்குங்கள்.

கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் எப்படிச் செயற்படுகிறார்கள்,

என்னென்ன போர்வைகளில் செயற்படுகிறார்கள்,

அவர்கள் மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளும் தந்திரங்கள் என்னென்ன,

அவர்களை மக்கள் எவவாறு அடையாளம் கண்டு கொள்வது என்ற விடயங்களை மக்களுக்கு விளக்குங்கள்.

கொலைகாரர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் எதிரான எமது போராட்டத்தை எமது ஸ்தாபன உறுப்பினர்கள் மட்டுமே தனியே நடத்துதல் என்றில்லாமல் மக்களை முடிந்தளவுக்கு இணைத்துக் கொள்ளுங்கள்

ஒவ்வொரு எமது ஸ்தாபன நடவடிக்கைகளிலும் மக்களையும் இணைத்துக் கொண்டால்தான் மக்களும் உண்மைகளைச் சுலபமாகக் கண்டறிந்து கொள்வார்கள். புரிந்து கொள்வார்கள்.

மக்களை வெறுமனே பார்வையாளர்களாக, ரசிகர்களாக மட்டும் வைத்திருந்தோமானால் நாம் மீண்டும் தவறு விடுபவர்களாவோம்.

எமது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் நாம் மக்களை எவ்வளவுக்கு எவ்வளவு இணைத்துக்கொள்கின்றோமோ அதிலேதான் எமது வெற்றியின் நிச்சயத்தன்மையும் நிரந்தரத்தன்மையும் தங்கியிருக்கின்றது.

**பாசமிகு தோழர்களே !**

நெஞ்சுத் துணிவோடும் நேர்மையுள்ளத்தோடும் மக்களைச் சந்தியுங்கள்.

மக்களோடு கலந்துரையாடுங்கள், மக்கள் எழுப்பும் கேள்வி எதுவாக இருந்தாலும் பொறுமையோடு தெளிவாகப் பதிலளியுங்கள்.

மக்களின் அபிப்பிராயங்களில் நிலவும் தவறுகளை ஆத்திரமெதுவுமின்றி மிகவும் நுட்பமான முறையில் சுட்டிக் காட்டித் திருத்துங்கள்.

வேலைத் திட்டங்களில் மக்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

மக்கள் அபிப்பிராயத்தை வென்றெடுங்கள்.

**மக்களை நாம் வென்றெடுத்தால் மக்கள் வரலாற்றை வென்றெடுப்பார்கள்●**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உளறுவாயன்

## YOU TOO EROS

நான் இவ்வளவு கெதியாய் காய்த்த மரமாகுவேன் எண்டு எதிர் பார்க்கவேயில்லை. நாலாபக்கங்களி லுமிருந்து கல்லெறிகள் வந்தபிறகு தான் இந்த மரமும் பூத்துக்காய்ச் சிருக்கெண்டது தெரியுது.

ஓம்! கடந்த அஞ்சு வெளியீடு களிலும் இரண்டுமுறை மட்டும் என்னை உளற அனுமதித்த புதிய கண்ணோட்டத்திற்கு காரசாரமாய்க் கடிதங்கள் வந்திருக்கு —அதுதான் விஷயம்.

உண்மைகள் முகத்திற்கு நேரே வந்தவுடன் மிரண்டு கத்துகின்றவர் களைக் கண்டெல்லாம் நான் ஒண்டும் பயப்பிடமாட்டன் என்று வீறாப் போடு சொல்லிப்போட்டு இருக்க யதார்த்த நிலைமை விடுகுதில்லை.

எல்லாப் பெடியளிட்டையும் துவக்குகள் இருக்கு. துவக்கு வைச் சிருக்கிற எல்லாருக்கும் எந்தக் கேள்வி நியாயமுமில்லாமல் சுடவும் தெரியுமெண்டால் ......நான் என்ன செய்ய?

தியாகியாய்ச் சாகலாம், வீரனாய் சாகலாம். உண்மைக்காய்ச் செத்தன் எண்டாவது இருக்கலாம். ஆனால் மனித உயிரின் மதிப்பே தெரியாமல் தெருநாயைப் போலச் சுட்டுப் புழு தியில் எறிந்து விட்டுப் போகின்றவர் களிடம் எந்தத் தர்ம நியாயத்தை விளங்கப்படுத்த......?

கொலைகளைப் பார்த்துப் பார்த்தே சலித்துப்போன மரத்துப்போன சனத்திடம் இப்போது செத்துச் சாதிக்க ஒண்டுமில்லையெனபதால் நான் உயிரோடிருக்க விரும்புகிறேன்.

இதிலை வில்லங்கம் என்னெண்டால், நான் கேள்விப்படுகிற—விளங்கிக்கொள்கிற சங்கதிகளையெல்லாம் இடைக்கிடை 'என்னையறியாமலே நான் உளறிக்கொட்டிவிடுவது தான்.

'என்ன உளறுவாயனைக் காணெல்லை எண்டு விசாரிச்சுக் கடிதம் எழுதியிருக்கிறவைக்காக நான் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கு— நான் சரியாப்பயந்து போயிருக்கிறன்

ஓம்! ஈரோஸை நான் இந்தளவிற்கு நினைச்சிருக்கேல்லை.

சோலிசுறட்டில்லாத நல்ல பெடியன்கள். ஆரோடையும் பிரச்சனைப் பட்டிடக் கூடாதெண்டு சும்மாயிருக் கிறான்கள், எண்டுதான் நான் நினைச்சிருந்தன்.

ஆனால்—

புலிகள் புளொட்டுக்கு மட்டுமில்ல ஈரோசிற்கும் எடுத்தவுடனே சுடத் தெரியுமெண்டது எனக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியிருக்கு.

ஈரோஸ் விசயத்தில் தலைப்போடுகிறவர்களுக்கு என்ன நடக்குமெண்டதைத்தான் தமிழ் அகதிகள் புனர் வாழ்வு அமைப்பைச் சேர்ந்த கந்தசாமியை கொலை செய்து காட்டியிருக்கின்றார்கள்.

இந்த TRRO கந்தசாமி, ஈழமக்களின் புனர்வாழ்வு. புனரமைப்பு வேலைகளுக்கென வெளிநாடுகளிலுள்ள நிதிவழங்கும் நிறுவனங்களோடுதொடர்பு கொண்டிருந்தவர்.

ஈரோசிற்கும் கந்தசாமிக்குமிடையில் கொடுக்கல் வாங்கலில் ஏதோ பிரச்சினை ஏற்பட்டதெண்டு அவரை சுட்டுக் கொன்றுவிட்ட ஈரோஸ் காரர்கள்—

இரசசியமாய் விசயத்தை முடித்துவிட்டதாக நினைத்துக் கொண்டு தலைவருக்கு வெற்றிச் செய்தியை அறிவிச்சிருக்கினம் அவரும் சகாக்களின் சாமர்த்தியத்தைப் பாராட்டி வாழ்த்துச் சொல்ல—

கந்தசாமியின் படுகொலை நடந்துமுடிந்துவிட்டது.

இதே மாதிரிதான் மூர்த்தியும் சர்வோதயத்தைச் சேர்ந்த கதிரமலை ஈரோஸ்காரர்களால் கொலை செய்யப்பட்டதும்—

புலி புளொட் பாணியிலேயே அந்தக் கொலையும் நடந்தது

கொலை செய்யிறதுக்கு முன் சவப் பெட்டியை வாங்கி கதிரமலையின் கண்முன்னால் வைச்சிட்டு, விசாரணையை நடத்திக் கொலை செய்திருக்கிறார்கள்.

ஏனெண்டால், எப்படியும் சவப் பெட்டி வாங்கியாகவேணும்— அதை சாகிறதுக்கு முந்தி வாங்கினாலென்ன பிறகு வாங்கினாலென்ன என்பது ஈரோஸ் காரர்களின் விளக்கம்.

இந்தக் கொலைகாரர் விளக்கமெல்லாம் வரலாற்றிற்கும் புதுசில்ல —இப்ப ஈழத்திற்கும் புதுசில்லை.

எவ்விதக்கேள்வியோ, சட்டமோ நியாயமோ எதுவுமில்லாமல் துவக் கெடுத்தவனெல்லாம் சுட்டுக்கொலைகள் செய்து கொண்டுபோற இந்தக் கொலைக்கள நிலைமை எங்கடை நாட்டில இல்லாமல் போகாதா...?

அவனவன பதவி ஆசையிலும் அதிகாரத்தனத்திலும், தாங்கள் தாங்கள் நினைச்சபடி பழிதீர்த்துக் கொள்ளுற அநியாயக் கொலைகளை மக்கள் தட்டிக் கேட்கிற நிலைமை உருவாகாதா......?

உளறுவாயனின் தர்மநியாயங்கள் யாருக்கு விளங்கப் போகுது?......ம்!

ஏன், இப்பவெல்லாம் வாற படங்கள் ஒண்டிலையும் பி.யு.சின்னப்பா நடிக்கிறேல்லை...... எண்டு கேட்கிறவனைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீங்கள்?......

இந்த மாதிரி கடந்த காலத்திலே நடந்தவை பற்றி ஒண்டும் தெரியாமல் அல்லது அதை வேணுமெண்டே மறைச்சுப் பத்திரிகைகளிலை எழுதிக் கொண்டிருக்கிறவையை நான் எப்பிடி விளங்கிக் கொள்கிறது.

எங்கடை போராட்டம் ஒரு கட்டத்திற்கு மேலே ஏன் ஏலாமல் போச்சு?

எந்தெந்தத் துரோகத்தனங்களால் தமிழ்ச்சனம் பாதுகாப்பில்லாததுகளாப் போச்சு?

ஒப்பந்தமும் இந்தியப்படையும் எப்படி வந்து சேர்ந்தன?

போராடிக் கொண்டிருந்த பொடியளையெல்லாம் சந்திக்குச் சந்தி கொலைசெய்து, தடைசெய்து சிறீலங்கா ராணுவம் ஊருக்குள்ளே வர விட்டவை யார்?

பேச்சுவார்த்தைகளுக்கு ஓடிப் போய் போராட்டத்தை வித்துக்காசாக்கிக் கொண்ட காட்டிக்கொடுப்புக் காரர்கள் யார்?

இவ்வளவு சனத்தையும் அநியாயமாய்ச் சாகக் குடுத்துப் போட்டு, இந்த திமிர்ச் சண்டையை நிற்பாட்டவும். காசு கேட்டுக் கொண்டிருக்கிற கொலை விசர்க் கூட்டம் எது?

இங்கெதல்லாத்தையும் ஒண்டுந்தெரியாத ஆக்கள் மாதிரி வதுவைகளாய் ஒளிச்சுப்போட்டு அதிகார வெறுப்பிலை குளிர்காயிறதுக்காக தியாகம், தேசபக்தியெண்டு பம்மாத்துப்பண்ணிக் கதையளந்து கொண்டிருக்கிறவையை பார்க்கேக்கை, இந்த நாட்டில் உளறுகிறவன் நான்மட்டுமில்லை எண்டது தான் உறுதியாகுது.

பாவம், இதுகளின்ரை பயம் எங்கை போய் முடியுமோ......?

---

(...... 1ம் பக்கத் தொடர்ச்சி)

# எங்கே போகின்றோம்? எங்கே போகின்றோம்? எங்கே போகின்றோம்? எங்கே போகின்றோம்?

"எங்கள் ரத்தம் உங்கள்
வாயைக் கொப்பளிக்கவோ
இதை எதிர்ப்பவரெவரும்
இல்லை என நீ கொக்கரிக்கவோ"

தாம் எவற்றைக் கண்டு வெஞ்சினம் கொண்டு எழுந்தனரோ,

எவற்றுக்கெதிராகத் தமது உயிரையும் மதியாது போராடினரோ ...

இன்று அவற்றின் வடிவமாகவே மாறி எமது மக்களையே பலிகொள்ளும் —

கொள்ளையர் கூட்டமாக,

குண்டர் படைகளாக,

கொலை பாதகர்களாக,

தமக்கே உதவாதவர்களாக,

விசர் நாய்களை விட மோசமான கொலைவெறி பிடித்தவர்களாக,

சையில் துவக்குடன் அலைந்து திரிபவர்களாக சில இயக்கங்கள் மாறி யுள்ளன.

''மரணம் தெருக்களில் துவக்குடன் திரிந்தது; தெருநாய் கூட ஓடி ஒளிந்தது'' என நமது கவிஞனொருவன் இந்நிலைமையை விபரித்திருப்பது முற்றிலும் பொருத்தமானதே.

இவ்வாறான 'மரண மனிதரின்' இலட்சியம்தான் என்ன?

தம்பியைக்கொண்டு அண்ணனை கொல்லுதல்,

அண்ணனைக் கொண்டு தங்கையைக் கொல்லுதல்,

உயிர் நண்பர்கள் கூட ஒருவரையொருவர் கொல்லுதல்,

மக்களை மனம்போன போக்கில் கொல்லுதல்...

என்பன இன்றுஇக்குழுக்களால்—

மிகவும் கடமையுணர்வு உள்ளவர்களின்,

தாய்நாட்டுப் பாசம் மிக்கவர்களின் செயலாக விளக்கப் படுகிறது.

வக்கிர புத்தி படைத்த இவர்களது ஆதரவாளர்களோ, இவர்கள் இப் புனித சைங்கரியத்தில் களைப்படைந்து போய்விடக் கூடாதே என்ற கவலையில்,

உடைத்த சோடாப் போத்தல்களுடன் ஒவ்வொரு சந்தியிலும் காத்துக் கிடக்கின்றார்கள்.

இதெல்லாம் கண்டு மனம் பொறுக்க முடியாமல் சில மனித மனமுள்ளவர்கள், 'ஏன் தம்பி இப்படி...? என்று கதறும்போது —

தலைவர்கள் கட்டளை; தட்டுவது தமிழ்ப் பண்புக்கே விரோதம் என்றோ,

அல்லது, 'நாம் சொல்கிறபடி கேட்கவில்லை, எனவே இவர்கள் சமூக விரோதிகள்' என்றோ அரசியல் விளக்கமளிக்கின்றனர்.

இவ்வேலைகளைச் செய்வதே சமுதாயத்தில் வீரபுருஷர்களின் கடமை என்று கூறி இன்னும் விபரமறியாத பச்சிளம்பாலகர்களுக்கு கூட சேவைப் பயிற்சியளித்துச் சட்டளைகளை நிறைவேற்றிக் கொள்ளும் லட்சணம் தொடர்கிறது.

இம் மரணமனிதர்களிடம் நாம் வேதனையோடு கேட்க விரும்புவது இதுதான்.

'நீங்கள் மக்கள் துயர் துடைக்க ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டீர்களா?

அல்லது—

உங்கள் துயர் துடைக்க மக்களின் தலையைக் கிள்ளுபவர்களா......?

பாருங்கள். உண்மை நிலைமை எவ்வளவு குரூரத்தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது....!

ஆயுத பலத்தை நிரூபிக்க ஆதிக்கவெறிக் கொலைகள் செய்யுமிந்த மனநோயாளிகளின் நடவடிக்கைகள் நிச்சயம் இவர்கள் மக்களுக்கானவர் களல்ல. என்பதையே நிரூபிக்கின்றது.

"எத்தனை ரணங்கள் எத்தனை
பிணங்கள்
ஈழத்து நாட்டின் வீதியிலே
எத்தனை உயிர்கள் போயினும்
பயணம் முடிவதில்லை பாதியிலே"

(- தொடர்ச்சி 8ம் பக்கம்......)

www.tamilarangam.net



# புதியகண்ணோட்டம்

(...... 7ம் பக்கத் தொடர்ச்சி)

**எங்கே போகின்றோம்?........**

நடந்து முடிந்த ஈழப்போராட்டத்தில் இறந்த 3500க்கு மேற்பட்ட போராளிகளிலும்,

15000க்கு மேற்பட்ட பொது—மக்களிலும்,

3 லட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளிலும்

அரைவாசிப் பேருக்கு மேற்பட்டவர்களின் நிலைக்கு காரணமான பெருமை(?) புலிகளையே சாரும்.

சிறீலங்கா ராணுவத்துடனான மோதலிலிறந்த போராளிகளை விடப் படுக்கைகளிலும்,

வைத்திய சாலைகளிலும்,

தங்குமிடங்களிலும், நிராயுத பாணிகளாக LTTE யினால் படுகொலை செய்யப்பட்டு இறந்தவர்களே அதிகம்.

சிறீலங்கா அரசபடைகளிடமிலிந்து தமிழ்மக்களைப் பாதுகாக்கவென இங்கு வந்த இந்தியப்படையினரை

தமது சுயநல பதவி, அதிகார மோகங்களுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதால் எதிர்க்க முற்பட்டு, இயலாத நிலையில் மக்களைக் கேடயமாக முன்னிறுத்திவிட்டு யாழ்குடாவையே விட்டு ஒடி வன்னிக்காடுகளில் மறைந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்கையால்—

யாழ்குடாநாட்டின் பொருளபதாரமே 20 வருடங்களுக்கு பின்தள்ளி வைக்கப்பட்டமையும்'

3000க்கு மேற்பட்ட தமிழ்மக்கள் அநியாயமாக உயிரிழந்தமையும்......

LTTE யின் தமிழ்மக்களுக்கான பொதுப்பணிக்கு,!' சிகரம் வைத்த செயல்களாகும்.

> வாசலில் எங்கள்
> ரத்தம் தெறித்தது.
> வாழ்க்கை எங்களைப்
> போருக்கழைத்தது.

அதுமட்டுமல்லாது—

ஆங்காங்கே ஆசிரியர்களை, அரசாங்க அதிபர்களை, அப்பாவி மக்களை, இளைஞர்களை... எல்லாம் புலிகள் 'சமூகவிரோதிகள்' எனப்பட்டம் சூட்டிக் கொன்றதால்—

அண்ணனை இழந்த தங்கையர்'

கணவனை இழந்த மனைவியர்

பிள்ளைகளையிழந்த பெற்றோர்,

குடும்பமே மொத்தமாக அழிந்தோர்,

என இன்று தெருவில் நிற்பவர்கள் 5000 பேருக்குமேல் வரும்,
இவர்கள் செய்த குற்றம்தான் என்ன? பிழையான விடயங்களை பிழையென கூறியதா?

அல்லது, புலிகளின் அதிகாரக் கொலைவெறி அரசியலுக்கு ஆதரவாளர்களாக இல்லாமலிருந்ததா ......

LTTE யினரை பொறுத்தவரை—

அவர்களையும், அவர்களது ஆதரவாளர்களையும் தவிர ஏனைய எல்லோருமே சமூகவிரோதிகளே!

இவர்கள் அழிந்து போவதால் புலிகளுக்கு எந்தக் கவலையுமில்லை.

ஏனெனில் புலிகள் தேசமெனக் கருதுவது அங்கு வாழும் மக்களை அல்ல. வெறும் மண்ணையே.

வேலிக்கதியால் ஓரங்குலம் உள் நகர்ந்தாலே பலகொலைகளைச் செய்யத்துணியும் சில தமிழ் பிரபுத்துவ மக்களுக்கு, இவர்கள் உண்மையில் மன்னனாகவே முடி சூட்டப்படவேண்டியவர்களே.

> இப்போதும் நாம் ரத்தக் களத்தினிலே
> எப்போது-
> சின்னத்தனமெல்லாம் செத்து மடிந்திடும்
> எங்களின் தேசத்திலே?

தமிழ் மக்களிடையே காணப்படும் கேடுகெட்ட பண்புகளின் வாரிசுகளான புலிகள் —

இன்று இந்திய இராணுவத்தினரோடு நடத்தும் யுத்தத்தை நிறுத்துவதற்கு இவர்கள் முன்வைக்கும் முக்கிய விடயங்கள் இவைதான்:

1—தாம் ஒப்படைக்க வேண்டிய ஆயுதங்களின் எண்ணிக்கை.

2—தமது இயக்க உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டிய பணத்தின் அளவு.

3—தம்மவரைத் தவிரப் பிறர் அரசியலில் கலக்க அனுமதிக்கப்படக் கூடாது என்பது.

மக்களுக்கு இவ்வளவு கஷ்டங்களையும் சுமத்தி விட்டுப் புலிகள் கேட்கும் இந்தக் கோரிக்கைகள்—

தமிழீழத்தில் தமிழ் மக்கள் நலம் காக்கவா என்பதுதான் நீங்கள் சிந்திக்க வேண்டியதாகும்,

இன்று புலிகள் — இந்தியப்படை மோதலில் இறக்கும் ஒவ்வொரு தமிழ் மகனின் உயிரும்,

துன்பங்களுக்கு உள்ளாகும் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும்—
அர்த்தமற்ற இந்த அற்பர்களின் அதிகார ஆசைக்காகவே பலியாகின்றார்கள் என்பதை,

நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.
தமிழ் மக்களுக்காக உருகி வழியும் இக்கயவர்கள் துப்பாக்கி முனையில் நடத்தும் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பின் விளைவிற்கும்,

சிங்கள இன வெறி அரசாங்கம் திட்டமிட்டு மறைமுகமாக நடத்தி வந்த அபிவிருத்திக் குழிபறிப்பு வேலைகளுக்கும் நாம் அதிக பேதத்தினைக் காண முடியாது.

ஒப்பந்தத்தின் பின் நிம்மதி வந்ததுஎன்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டமக்கள்,

புலிகளின் நடவடிக்கைகளாலும், சிவில் நிர்வாகச் சீர்குலைப்பினாலும்—

கைக்கெட்டியது வாய்க்கெட்டா நிலையில்,

இரும்பவும் தமது நாளாந்த ஜீவனபதி வாழ்க்கை பறிபோன நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் புனர் வாழ்வுக்கென வெளி நாடுகளால் அளிக்கப்பட்ட நிதிகள்கூட—

குறிப்பிட்ட கால எல்லைக்குள் பாவிக்கப்படாமையினால், மீளவும் அந்தந்த நாடுகளிலேயே திரும்பப் பெறுதல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது,

தமிழ்மக்களின் வாழ்விற்கு—

தமிழர்களுக்காகப் போராடுகின்றோம் என்று கூறிக்கொண்ட இயக்கமே தடையாய நிற்பதைக் கண்டு,

கொடுப்புக்குள் சிரித்து மகிழ்ச்சி கொள்ளும் இனவாத அரசோ, இவ்வுதவிகளைப் புத்திசாலித்தனமாகச் சிங்களப் பிரதேசங்களில் செலவிட்டுக் குதூகலமடைகிறது.

நிர்வாகச் சீர்குலைப்பினால்...

வல்லான் வகுத்ததே சட்டமும் ஒழுங்கும் ஆகிவிட்டது.

கொலைகளும் கொள்ளைகளும் நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன.

கள்ளச்சாராயமும், கொள்ளை லாப வேட்டையும் மக்களை நன்றாகவே உறிஞ்சி வருகின்றன.

எதிர்காலத்திற்குரியவர்களான இளம் மாணவர்களோ—

பாடசாலைகளில் கல்விச் சீர்குலைவினால், ஓர் அறிவில் சூனியமான மூடப்பரம்பரையை உருவாக்குவதற்கான சகல வாய்ப்புக்களையும் பெற்று வருகிறார்கள்.

இது போதாதென்று,

ஆயுதக் கொள்வனவுப் பணத்துக்கென LTTE யினால் ஆரம்பிக்கப்பட்ட ரோதை வஸ்து அறிமுகத்திற்கும் இரையாகி,

பல இடங்களிலும் சமுதாயத்திற்கு உதவாதவர்களாக வளர்ந்து வருகிறார்கள்.

ஒப்பந்தத்தினால் கிடைத்த ஒரு சில நன்மைகள் கூட—
புலிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நாட்டின் அமைதியின்மையைக் காட்டி'

சிங்கள அரசினால் திட்டமிட்டுப் பின்போடப்பட்டும் திசைதிருப்பப்பட்டும் வருகிறது.

இவ்வாறான அவதிகளுக்கிடையே,

மக்கள் படும் அல்லல்களைப் பொறுக்கமாட்டாது நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முனையும் ஒரு சில துணிவுள்ள மனித உயிர்களும்—

''சமூகத்துரோகிகள்'' என்று பெயர் சூட்டப்பட்டு LTTE யால் கவரப்படுகின்றது.

இவ்வாறான நிலைமை தொடருமானால் எமது மக்களினதும் நாட்டினதும் நிலைமை என்னவாகப் போகிறது?

உண்மையிலேயே சமூகத்துரோகிகள் யார்?

மக்களா?

LTTE யா?

> நீறாகப் பகைவீழும்
> நாள் நாளை வருமென்ற
> நிஜம் தன்னை நீ சொல்லிச்
> சங்கே முழங்கு.

LTTE யின் சாதனைகளும் சாமர்த்தியங்களும் போதுமானதாக இல்லையென்று,
PLOT உம், அதே வழியில் புலிகளுக்குப் போட்டியாகத் தமது வீர தீரங்களைக் காட்ட ஆரம்பித்திருப்பதானது,

மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுவிடக்கூடாதென்பதில் இவர்களும் மிகவும் அக்கறையோடிருக்கிறார்கள் என்பதையே உணர்த்துகிறது.

LTTE யினரால் இப்போது வினைத்திறனாக நடத்த முடியாதிருக்கும்—

கப்ப வசூலிப்பு,

பகற் கொள்ளைகள்,

மிரட்டிப் பணப்பறிப்பு,

ஆட்கடத்தல்......

போன்றவற்றைச் சிறீலங்கா அரசின் ரகசிய உதவிகளுடன் மிகவும் செட்டித்னதமாகவே PLOT செய்து வருகிறது.

அரசியல் அதிகாரத்திலிருக்கும் பிரபல சிங்கள முதலையொன்றின் வீட்டிற்குள்ளேயே ஒளித்து வசித்து வரும் உமாமகேஸ்வரனின் தலைமையில் இயங்கி வரும் இயக்கத்தினர்—

சிறீலங்கா அரச படை முகாம்களுக்குப் பக்கத்தில் இருந்து கொண்டு தமது சூறையாடல்களைத் தொடர்ந்து வருவது,

அவர்கள் எங்கு போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள உதவும்.

இவ்வாறான PLOT இன் சமூகவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க முயன்ற இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கொள்ளுமுகமாகவே —

இந்திய இராணுவத்தை வெளியேறச் சொல்லும் புரட்சிகரப் பாதையில் தாம் போய்க்கொண்டிருப்பதாகத் தம்பட்டமடிக்கும் செயல்களில் PLOT இறங்கியிருக்கிறது.
இவ்வாறு மக்களுக்காக என்று சொல்லிப் புறப்பட்ட இயக்கங்களே திசை தடுமாறி நின்று ஆடும்போது'

எமது நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் பரிசு நிலையற்ற வாழ்வும், நித்திய சாவும் என்றிருப்பதில் வியப்பேதும் இல்லை.

ஆகவே, மக்களே!

நீங்கள் நித்தமும் செத்து வாழ்வதைவிட,
நிரந்தர விடியலை நோக்கி அநீதிகளுக்கெதிராக ஒன்றுதிரண்டு எழுந்தால் மட்டுமே —

எமது நாட்டில் அமைதிப் புறாக்கள் பறக்க முடியும்.

இல்லையேல்—


எமது பயணம் என்றும் நிரந்தர இருளினை நோக்கியே முன்னேறுவதாய் முடியும். -

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF**

கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் திரு. அ. வ. அருண்மொழித்தேவன் அவர்களினால் 119, பல்கலைக் கழகவீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ - சி. ஆர். சி. அச்சகத்தில் 15.07.1988 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# கொலைவெறி நோயாளர்களால் பலியெடுக்கப்பட்ட தோழர்களுக்கு அஞ்சலி!

## தோழர் றொனி

## தோழர் யோகராஜா

ஆகிய எமது இரு தோழர்களையும் 03/07/88 அன்று மாலை முருங்கனிலிருந்து கடத்திச் சென்று 'புளொட்' இயக்கத்தினர் படுகொலை செய்துள்ளனர். PLOT என்ற பெயருக்குப் பொருத்தமாகவே நடந்து வரும் இந்தச் சதிகாரக் கும்பலை 'இயக்கம்' ...... 'போராளிகள்' ...... என்ற ரீதியில் சிந்தித்தாலே அருவருப்பு ஏற்படும் விதத்தில் கொள்ளைக்காரக் கும்பலாகவும், கொலைவெறி பிடித்த நோயாளிகளாகவும் செயற்பட்டு வருகிறார்கள். இதற்கு முன் வவுனியாவில் தோழர் ஜீவா இந்தப் புளொட் வெறியர்களால் சுடப்பட்டு, குளத்தருகே வீசியெறிந்து கிடந்த சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

29.03.88 — 07.04.88 க்கிடையில் முருங்கனிலிருந்து இந்தச் சதிக் கும்பலால் கடத்திச் செல்லப்பட்ட எமது தோழர்களான தோழர் ஐயா (மத்திய குழு உறுப்பினர்—EPRLF), தோழர் சாரங்கன், தோழர் தங்கேஸ், தோழர் ரவி, தோழர் பவா, தோழர் சில்வா ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர்.

எமது தோழர்களின் சடலங்களை குரூரச் சித்திரவதைகளுக்குஉள்ளான அடையாளங்களோடு தெருவில் கண்டெடுத்தோம்.

இது தவிர கடந்த ஓரிரு மாதங்களுக்குள் டெலோ உறுப்பினர்களான குரு, சதீஸ், சிவம் போன்ற பலரைச் சுட்டுக் கொன்றும், மேலும் பல தோழர்களைக் கொல்ல முயற்சிகள் செய்தும் புளொட் தனது வெறித்தனத்தைப் பகிரங்கப் படுத்தியிருக்கிறது.


தன்னைத்தானே மாற்றிக் கொள்ள முடியாதவாறு பீடித்துக் கொண்டுள்ள இந்தக் கொலைவெறி நோயினால், புளொட் தனது வரலாறு முழுவதும் தனக்குள்ளும் வெளியேயும் குரூரக்கொலைகளைப் புரிந்து வந்திருக்கிறது.

போராட்ட காலத்தில் எமது பொது எதிரிக்கெதிராக எந்தவொரு துரும்பையும் எடுத்துப் போட்டிருக்காத இந்தச் சோத்துப் பார்சல்காரர்கள் —

300க்கும் மேற்பட்ட உட்கொலைகளாலும், ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளைப் படுகொலை செய்த நடவடிக்கைகளாலும் தம்மை நிறுத்திக் கொள்ள முடியும் என்று நினைத்து மூக்குடைபட்டுப் போன இந்தச் சதிக் கும்பல் —


இப்போது கொள்ளைகளுக்கும் கொலைகளுக்கும் பெயர் போன குழுவாகத் துவக்குகளுடன் அலைகிறது.

இந்தக் கொலை வெறியர்களுக்கு கடந்தவாரம் பலியாகிப்போன எமது தோழர்கள் றொனி, யோகராஜா ஆகிய இருவருக்கும் துயரம் தோய்ந்த நெஞ்சுடன் அஞ்சலி செய்கிறோம்


தோழர் ஐயா.


தோழர் சாரங்கன்.




தோழர் தங்கேஸ்.


தோழர் ரவி.

'புதியதோர் உலகம்' நாவல் புளொட்டிலுள் நடந்த அராஜகங்களைக் கண்டுற்று வெளியேறியவர்களால் எழுதப்பட்டது.....

உடம்பு பூராக குறுந்தடியின் பலமான அடியினால் வரிக்குதிரை வடிவில் குறிபாகி தழும்புகள் கருப்பாகி தடித்து கிடந்தன.

நேற்று இரவுதான் அவன் முதன் முதலில் உளன்றியில் ஏற்றப்பட்டான். உளன்றியில் ஏற்றி விசாரணை செய்வதெல்லாம் இரவில்தான்.

உயரமான தனிக் கொட்டகையொன்றின் நடு முகட்டில் கிணற்றுக் கப்பியைப் பிணைத்து அதில் கிணற்றில் நீர் அள்ளுவதுபோல கயிற்றைப்போட்டு ஒரு முனையில், பின்புறம் கைகள் கட்டப்பட்ட கைதியின் இரு கால்களையும் கட்டுவார்கள். மறுமுனையை இழுக்கும்போது தலை கீழாகத் தொங்குவார்.

கயிற்றை வேண்டிய அளவிற்கு நெகிழ்த்தும்போது உள்ளங்காலில் அடிகொடுக்கும் வகையில் கணக்காக வந்து நிற்கும். அப்படி விழும் அடி உடம்பு பூராக வலிக்கும் என்பது சித்திரவதையின் ஒரு பாடமாம்.

கயிற்றை அப்படியே விட்டால், தலை மடார் என்று நிலத்தில் மோதிக் குலுங்கும். சித்திரவதையிலே மிகக் கொடுமையானது உளன்றியில் அனுபவிக்கும் வேதனை தான். உளன்றி என்ற சுத்தமான தமிழ்ச் சொல்லை செயலதிபரே பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து தேடி எடுத்து அதற்கு பெயரிட்டார்.

⊖ ⊖ ⊖

''இந்த அறிக்கை என்னோடு இருக்கட்டும். நீ நடராசா மாஸ்டரை தொடர்ந்தும் விசாரி''

எதுவும் புரியாமல் குழம்பி நிற்கும் அவனை அருகில் அழைத்து ரகசியமாக காதுக்குள் சொன்னார். அவன் தலையாட்டிக் கொண்டே புறப்பட எழுந்தான்.

''வேண்டுமானால் நடராசாவை உளன்றியிலும் ஏற்றி விசாரி எப்படியும் அந்த அறிக்கையை பிழை விடாமல் எடுத்துக் கொண்டுவர வேண்டும்'' அவர் கண்டிப்பாகக் கூறினார்.

'ஓம் பெரியய்யா! நாளைக்கே செய்கிறேன்''

அவன் புதிய பொறுப்போடு வெளியே சென்றான்.

செயலதிபர் யாரும் இல்லாத அந்த இடத்தில் ஏகாந்தமாக எதையோ நினைத்து சிரித்துக்கொண்டார்

அந்த வழமையான புன்னகை மீண்டும் அவர் முகத்தில் குடியேறியது.

⊖ ⊖ ⊖

''சங்கர்! இந்த விசயத்தை யாருக்கும் சொல்லிடாதை. இதை யாருக்காவது சொல்லாமலும் இருக்க எனக்கு ஏலாது. எனது நம்பிக்கையான ஒரு நண்பன் மூலம் நான் கேள்விப்பட்டன். எங்கள் பயிற்சிமுகாம் ஒன்றில் சித்திரவதைக் கூடம் ஒன்று இருக்குதாம். நாலாம்மாடி என்று அதை ரகசிய பரிபாஷையில் அழைக்கிறார்களாம். அந்த சித்திரவதைக் கூடத்தில் பயிற்சிக்கு வந்த பல தோழர்கள் சித்திரவதைக்குள்ளாகியிருக்கிறார்களாம். ஒருவனை கொலையும் செய்து விட்டார்களாம்''

⊖ ⊖ ⊖

இங்கு கழகத்தின் கொள்கை இலட்சியம் நடைமுறை எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. கழகத்தில் இப்போது அராஜகமே தலைவிரித்தாடுகிறது. இங்கு எவரும் இது பற்றி ஏன் என்ற கேள்வி எழுப்ப முடியாது. அப்படிக் கேட்டால் விசாரணை, சித்திரவதை என்று முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுவார்கள். அதன்பின் அவர்கள் உயிருடன் வருவது அருமைதான். இந்த நிலைமை ஏற்படும் என்று யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. நாம் எல்லோருமே நன்றாகவே ஏமாற்றப்பட்டுவிட்டோம். இது எமக்கு ஏற்பட்ட பெரும் தோல்விதான். இதை நாம் ஜீரணித்தேயாக வேண்டும்.

⊖ ⊖ ⊖

''கழகம் ஒரு புரட்சிகர விடுதலை இயக்கம் என்று தான் இங்கு வர முன் நினைத்திருந்தேன். இப்பொழுது இதில் இன்னும் அராஜகப் போக்குத் தான் மேலோங்கியிருப்பது தெரிகிறது. தளத்தில் இருக்கும் போது இம்மாதிரி எதுவும் தோன்றாமல் இருந்தது ஆச்சரியம் தான்''

⊖ ⊖ ⊖

அருள் அறிவு மயங்கி மல்லாந்து கீழே கிடந்தான். அவசரமாக தண்ணீர் வரவழைத்து தெளித்தார்கள். அவன் கண் விழித்திதும் முன்னைய உற்சாகம் குறையாதபடி முகாம் பொறுப்பாளர் ஆர்ப்பாட்டமாக சிரித்துக்கொண்டு கூறினார்.

''ஓடிப்போய் ஒருவர் கத்தியும் கொச்சிக்காதூளும் கொண்டு வாருங்கள். இவன் முதுகுத்தோலை உரிச்சு கொச்சிக்காதூள் வைத்து தைக்கவேண்டும்''

வேடிக்கையாக கூறுகிறார் என்றுதான் முதலில் நினைத்தார்கள்.

ஆனால் பின்பு அதுவே அடுத்தகட்ட செயற்பாடானபோது அவர்களுக்கு மயிர்சில்லிட்டது.

அருள் அந்த முகாம் அதிர இடியோசை போல அலறிக்கொண்டிருந்தான்.

நான்கு பேர் அவனை மரக்குற்றியொன்றோடு சேர்த்து இறுக்கிப் பிடிக்க ஒருவன் சவரக் கத்தியால் அவன் முதுகைப் பிளந்தான். வழிந்தோடும் குருதி பற்றிய கருத்தேயில்லாமல் மிளகாய்த் தூளையும் மஞ்சள் தூளையும் உப்புடன் கலந்து தடவிய பின் ஊசி நூலால் முதுகைத் தைத்தார்கள். சதையும் குருதியும் ஒரு புறம் தொங்கி படுபயங்கரமாகக் காட்சி கொடுக்க அருள் வேதனையின் விளிம்பில் நின்று துடிதுடித்து அலறிக்கொண்டிருந்தான். ஒரு பயங்கர மிருகத்தின் அபசுரவொலமாக அது அவர்கள் எல்லோரையும் நடுங்க வைத்தது. அந்தக்காட்சியைக் காணச்சகிக்காமல் பலர் கண்களை மூடினார்கள். ஒருவன் மூர்ச்சித்து விழுந்தான்.

⊖ ⊖ ⊖

''அவன் ஏன் சித்திரவதைக்குள்ளானான். என்ன பிழை விட்டவனாம்'' சங்கர் இப்போது அமைதியாகவே கேட்டான்.

''கழகத்தில் அவன் நடத்தை சந்தேகத்திற்குரியதாம். எங்கள் செயலதிபருக்கு அவன் குதர்க்கமான கேள்விகளைக் கேட்டு கடிதம் எழுதியிருந்தானாம். ஆனால் உண்மையில் அவன் அப்படி ஏதும் எழுதவில்லை. எங்கள் இராணுவம் சோசலிச இராணுவமா அல்லது முதலாளித்துவ இராணுவமா என்று மட்டும்தான் கேட்டு எழுதினவனாம்''

⊖ ⊖ ⊖

அந்தப் பாலகனின் கைகள் இரண்டையும் ஒருவன் அமுக்கிப் பிடிக்க இவன் அவனை நிர்வாணமாக்கி ஒரே வெட்டாக அவன் ஆண்குறியை வெட்டி, கோரமாகச் சிரித்தான்.

நிலம் எங்கும் ரத்தம் குபுகுபுவென்று பாய அந்த இளம் குருத்து துடிதுடித்து நெளிந்தது.

தங்கள் தோழனுக்கு நேர்ந்த இந்த அவலத்தை கண்டும் மனம் தளராமல் மிகுதி பலர்கள் தம் பிஞ்சு வாயால் ஒரே உறுதியில் கூறினார்கள்.

''நாம் கொண்ட தமிழீழ இலட்சியத்தின் மீது ஆணை இந்தக் கொடுமைக்கு நீங்கள் பதில் சொல்லியேயாக வேண்டும். தமிழ் மக்கள் உங்களைச் சும்மா விட மாட்டார்கள்.''

அந்த இறுதி நேரப் பிரகடனத்தை முழங்கிய அந்த மழலைகளின் நாதம் அதன்பின் அங்கு அதிக நேரம் ஒலிக்கவில்லை.

அந்த ஆறு மலர்களும் கோரமாகச் சிதைக்கப்பட்டு மடியவிடப் பட்டார்கள்.

முதல் நாள் இரண்டு அரசாங்க சி.ஐ.டிகளைப் புதைத்த இடத்திற்கு கொண்டு போய் இவர்களையும் மண் போட்டு மூடி மறைத்தார்கள்.

மண் வெட்டி, கூடைகளை அந்தந்த வீடுகளில் கொடுத்து ரத்தக் கறை படிந்த வாகனத்தையும் கழுவி விட்டு அவர்கள் வந்து செயலதிபரிடம் அந்த விபரத்தை உடனடியாகக் கூறிய போது அவர் தலையைக் கவிழ்ந்து கொண்டு எல்லாவற்றையும் கேட்டு விட்டு சொன்னார்.

''விசயம் வெளியில் வராத வகையில் நன்றாகப் புதைத்து விட்டீர்களா''

''ஓம் பெரியய்யா''

⊖ ⊖ ⊖

சிங்கள இராணுவத்தின் அட்டகாசம் பற்றியோ, பொது மக்களின் கண்ணீர் பற்றியோ இவர்களுக்கு கிஞ்சிதமும் அக்கறையில்லை.

என்றோ நடந்து முடிந்த கொலைகளுக்கும் தாக்குதல்களுக்கும் இப்பொழுதும் சக விடுதலை இயக்கங்களை பழிவாங்க துடிப்பதுதான் இவர்கள் காண்பிக்கும் தாபன விசுவாசம்.

⊖ ⊖ ⊖

அப்படி சந்தேகம் வந்தாலோ அவர்கள் அடுத்த நாளே காணாமல் போவார்கள். கழகத்தை உடைப்பதற்கு சதி செய்தவர் என்ற சந்தேகத்தில் விசாரிக்கப்படுவார். விசாரணை என்றால் சித்திரவதை. சித்திரவதை என்றால் மரணம்.

மரணமான பின்பு தப்பி ஓடிவிட்டான் என்ற செய்தி........

—————— 'புதியதோர் உலகம்' நாவலிலிருந்து

1988 ஆடி 15



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்